## இராமநாதபுரம் நகராட்சி

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 ஆகஸ்ட் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 30.08.2019 ந் தேதி காலை 10.40 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் 1**

இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் ஆகஸ்ட் 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.985**– பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் 2**

இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் ஆகஸ்ட் 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.986**– பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் 3**

இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2019–20, வார்டு எண்–2, பாலசுப்பிரமணிய சுவாமி கோவில் மேற்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு 13.08.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.கே.திருமுருகன்<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 5,75,000/– | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 5,75,000/– | 0.50% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.கே.திருமுருகன், இராமநாதபுரம்

அவர்களது 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்; 2245/2019/இ1

**தீர்மானம் எண்.987–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 4**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் 2019–20, விவேகானந்தர் சாலையில் (லலிதா ஜுவல்லரி எதிர்புறம்) மனித ஆய்வு குழிகளுக்கு இடையே புதிய சேகரிப்பு குழாய் அமைக்கும் பணிக்கு 14.08.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு (ரூ) | வழங்கியுள்ள விலைவிகிதம் கூடுதல் /குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 50,000/- | 0.18% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 50,000/- | 0.80% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சரவணன், இராமநாதபுரம் அவர்களது 0.18% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு;** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்; 2244/2019/இ1

**தீர்மானம் எண்.988–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 5**

இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2019–20, பட்டிணம் காத்தான் குப்பை கிடங்கில் தெற்கு பக்கம் விடுப்பட்ட பகுதிகளுக்கு சுற்றுசுவர் அமைக்கும் பணிக்கு 14.08.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.கே.சத்தியநாதன்<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 4,30,000/– | 0.12% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 4,30,000/– | 0.40% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.சத்தியநாதன், இராமநாதபுரம் அவர்களது 0.12% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்; 2247/2019/இ1

**<u>தீர்மானம் எண்.989</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 6</u>**

இராமநாதபுரம் நகராட்சி, Housing and Urban Development Corporation Limited, நிறுவனத்தின் (HUDCO) கடிதம் எண்.HUDCO/CSR 17/Ramanathapuram Municipality–2019/897, நாள்.10.07.2019–ன்படி இராமநாதபுரம் நகராட்சி பள்ளியான எம்.எஸ்.கே.தொடக்கப்பள்ளியில் கழிப்பறை அமைக்கவும், ஆழ்துளை கிணறு அமைக்கவும் மற்றும் ஆசிரியர் அறை கட்டுவதற்கும், மேலும் வள்ளல் பாரி நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கு ரூ.49.47/– லட்சத்திற்கு HUDCO CSR(Corporate Social Responsibility) நிதியின் கீழ் நிதி ஒதுக்க உரிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5255/2018/இ1

**<u>தீர்மானம் எண்.990</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 7</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் குப்பை அகற்றும் லாரி TDR–4905 வாகனத்திற்கு 03.09.2019ம் தேதியுடன் தகுதிச்சான்று

முடிவடைவதால் மீண்டும் புதுப்பித்து பழுதுப்பணிகள் மேற்க்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.86,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.991</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 8</u>**

இராமநாதபுரம் நகராட்சியின் கீழ் செயல்படும் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் வள்ளல்பாரி நடுநிலைப்பள்ளியில் மொத்தம் 798 மாணவிகள் பயின்று வருகின்றனர். இம்மாணவிகள் பயன்படுத்தப்படும் Hazardous Waste–யை அப்புறப்படுத்தவும், எரித்து சாம்பலாக்கும் பொருட்டும், இரு பள்ளிகளிலும் தனித்தனியாக எரியூட்டும் இயந்திரம் (INCINERATOR MECHINE) அமைத்து வாங்கி வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது. மேற்படி பணிக்கான செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u>** – பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.992</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 9</u>**

இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–6, பாத்திமா நகர், சர்வே எண்–GRS No.343/3, T.S.No.5/3, Ward-C,Block-11ல், நுண்ணுரம் செயலாக்கம் மையம் (MCC) கட்டும் பணிக்கு, அவ்விடத்தில் பொது மக்களுக்கு இடையூறாக உரக்கிடங்கு இருப்பதாலும், மேலும் அவ்விடத்தில் குப்பைகளை கொட்ட கூடாது என்று பொது நல வழக்கு எண்.W.P(MD)No.15060 of 2019–ல் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் M/s.J.M.Hassaual Bazari என்பவர் வழக்கு தொடர்ந்து உள்ளார். மேற்படி வழக்கு எண். W.P(MD)No.15060 of 2019–ல் நகராட்சி வழக்கறிஞர் ஆஜராகி வழக்கை ஆட்சேபத்தின் அடிப்படையில், உயர்நீதி மன்றம் வழக்கை விசாரணை செய்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கிற்கு வழக்குரைஞர் கட்டணம் ரூ.15,000/–ஐ நகராட்சி வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5408/2018/இ–1(3)

**<u>தீர்மானம் எண்.993</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 10</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதார பிரிவில் தினசரி பணியாக நகரின் அனைத்து பிரதான சாலைகள் மற்றும் தெருக்களில் உள்ள சாலைகளின் இருபுறமும் அதிகளவு

புழுதி மண் நிறைந்துள்ளதால் அவை அனைத்து சாலைகளிலும் பரவி பொதுமக்களுக்கு இடையூறாக இருப்பதால், அவற்றை நாள்தோறம் துப்புரவு பணியாளர்களை கொண்டு அகற்றப்பட்டு வருகின்றது. தற்போது போதிய அளவு மண்கூட்டும் பிரஸ் இல்லாததால் பணிகள் பாதிப்படைவதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி 100 எண்ணம் மண்கூட்டும் பிரஸ் வாங்கி வழங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.70,000/–த்திற்கு (எழுபது ஆயிரத்திற்கு) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2683/2019/எச்1)

**<u>தீர்மானம் எண்.994</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 11</u>**

இராமநாதபுரம் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2019–2020ம் நிதியாண்டின் கீழ், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மற்றும் மாண்புமிகு தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் மருத்துவர் எம்.மணிகண்டன் அவர்களின் பரிந்துரை செய்த பணிகளான கீழ்க்கண்டவாறாக ரூ.10.00/– லட்சம் மதிப்பீட்டிற்கு மாவட்ட ஆட்சிதலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களின் செயலாணை உத்திரவின்பேரில் ந.க.எண்.ஆர்4/3236/2019, நாள்:05.08.2019–ன்படி நிர்வாக அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக அறிக்கை சமர்ப்பிக்க கோரியுள்ளதற்கு கீழ்க்கண்ட நகராட்சி பகுதிகளில் 2'' LED மின்விளக்குகள் அமைக்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண்–8, காட்டு பிள்ளையார் கோவில் தெருவில் LED மின்விளக்குகள் அமைத்தல் | 5.00 லட்சம் |
| 2 | இராமநாதபுரம் நகராட்சி – வார்டு எண்–20, சின்னக்கடை வீதி, பாம்பூரணித் தெருவில் LED மின்விளக்குகள் அமைத்தல் | 5.00 லட்சம் |
| | மொத்தம் | 10.00 லட்சம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>** மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்

ந.க. எண்: 2627/2019/இ1
**<u>தீர்மானம் எண்.995</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 12</u>**

இராமநாதபுரம் நகராட்சி பகுதிகளின் டெங்கு மற்றும் சிக்கன் குனியா போன்ற கொசுக்காளால் பரவும் காய்ச்சல் தடுக்கும் பணிகளுக்கு தேவையான கொசு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் வாங்கி பயன்படுத்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூபாய்.3,50,000/– (மூன்று லட்சத்தி ஐம்பதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2681/2019/எச்1)

**தீர்மானம் எண்.996**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 13**

இராமநாதபுரம் நகராட்சி வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும். இந்நகர் பகுதியில் குடியிருப்புகள், வர்த்தக நிறுவனங்கள், மருத்துவமனைகள் பெருகி வருகின்றன. எனவே இந்நகரில் நாள்தோறும் பெருமளவில் திடக்கழிவுகள் உருவாகிய வண்ணம் உள்ளன. எனவே குப்பைகளை தேசிய பசுமை தீர்ப்பாயம் வழிகாட்டுதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ஆகியவைகளின்படி சுற்றுச் சூழலுக்கு உகந்த வகையில் விஞ்ஞான முறைப்படி செயலாக்கம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் MCC மற்றும் OCC ஆகியவைகளை தீர்மானித்து குப்பைகளை 100% பிரித்து செயலாக்கம் செய்து உரம் தயாரிக்கும் பணிமேற்கொள்ள வேண்டியுள்ளது. தற்பொழுது இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களை வைத்து இப்பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. தற்பொழுது இந்நகராட்சியில் 93 நிரந்தர துப்புரவு பணியாளர்களும், ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் 83 துப்புரவு பணியாளர்களும் மொத்தம் 176 நபர்களும் பணியில் உள்ளார்கள். அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை:1 MEB, நாள்.30.04.1997–ன்படி இந்நகராட்சிக்கு 342 எண்ணம் துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது உள்ள துப்புரவு பணியாளர்கள் போக மீதம் உள்ள பணியாளர்கள் தேவைக்கு ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் நியமனம் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு எண்.K-Dis, 28369/J3/2018, நாள்.22.11.2018–ல் உத்திரவு வழங்கியுள்ளார்கள். அதன் அடிப்படையில் பொது சுகாதாரப்பணியினை OCC மற்றும் MCC ஆகியவைகள் சிறந்த முறையில் செயல்படுத்தவும், திடக்கழிவுகளை 100% பிரித்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள ஏதுவாகவும் , தற்பொழுது வெளிக்கொணர்வு மூலம் பணியில் உள்ள 83 எண்ணம் கொண்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் வரும் டிசம்பர்–2019வுடன் முடிவடைவதாலும், மேலும் உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கும் பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோருவதில் காலதாமதம் ஏற்பட்டு பொதுசுகாதாரப்பபணிகள் பாதிக்கக்கூடும் என்ற காரணத்தினால், பொது சுகாதார அவசர அவசியம் கருதி தற்பொழுது பற்றாக்குறையாக உள்ள 166 துப்புரவு பணியாளர்கள் பணிக்கு

மாவட்ட ஆட்சியர் அவர்களின் விலை விகிதத்தில் ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் பணியாளர்களை நியமனம் செய்யவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.286.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – பொது சுகாதார அவசர அவசியம் கருதி 150 துப்புரவுபணியாளர்களை வெளிச்சந்தையில் பெற்று துப்புரவுப்பணி மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.997</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 14</u>**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி 2018–19ன் கீழ் " Providing Internal Plumping Works for Water Supply HSc's 3500-Nos" இணைக்கும் பணிக்கு 18.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/s AAG SAFETY SYSTEM'S Thiruvanamalai அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்று கொள்ளப்பட்டு, மேல்கண்ட ஒப்பந்ததாரர்க்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.936, நாள்.28.06.2019–ன்படி முன் வைப்புத் தொகை மற்றும் ஒப்பந்தப்பத்திரம் வழங்க LOA (Letter of Acceptance) அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்ததாரர் முன்வைப்புத் தொகை மற்றும் ஒப்பந்தப் பத்திரம் செலுத்தாததால் இத்திட்டப்பணியினை அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யவும் அதனை தொடர்ந்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1677/2018/இ1

**<u>தீர்மானம் எண்.998</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 15</u>**

இராமநாதபுரம் நகராட்சி, தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக இந்நகராட்சி பணியாளர்கள் கொண்டு தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கான மின்சாதன பொருட்கள் வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/–த்திற்கு பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள நகர் மன்ற நிர்வாக அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**–மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2144/2019/இ1

**<u>தீர்மானம் எண்.999</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் 16

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் பினாயில், நீர்த்த சுண்ணாம்புத்தூள், பிளிச்சீங் பவுடர் ஆகியவை விநியோகம் செய்வதற்கு 23.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில், மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்கள் | தொகை |
|---|---|---|---|
| 1 | விகாஷ் ஏஜென்ஸிஸ்,<br>739/6, மகாலெட்சுமி நகர்<br>3–வது தெரு, கே–புதுார்,<br>மதுரை. | 1)பினாயில்–1லி<br>2)பிளிச்சிங் பவுடர்–1கி<br>3)நீர்த்த சுண்ணாம்பு துாள்–1கி | 1)ரூ.44.00/–<br>2)ரூ.42.00/–<br>3)ரூ.13.50/– |
| 2 | G.V.ஏஜென்ஸிஸ்,<br>739,மகாலெட்சுமி நகர்,<br>கே–புதுார்,<br>மதுரை. | 1)பினாயில்–1லி<br>2)பிளிச்சிங் பவுடர்–1கி<br>3)நீர்த்த சுண்ணாம்பு துாள்–1கி | 1)ரூ.42.00/–<br>2)ரூ.39.00/–<br>3)ரூ.12.25/– |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரிசை எண்–2ல் கண்ட "G.V.ஏஜென்ஸிஸ், கே–புதுார்,மதுரை" அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், இவ்வொந்தப்புள்ளியை ஏற்று, மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கலாம்.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1705/2019/எச்1

தீர்மானம் எண்.1000– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் 17

தமிழ்நாடு உள்ளாட்சிகளில் விளம்பரங்கள் / விளம்பர பலகைகள் முறைப்படுத்துதல், நிறுவ அனுமதி வழங்குதல் குறித்த அரசாணைகள், சட்ட திருத்தங்கள் மற்றும் அரசியல் வெளியீடு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இராமநாதபுரம் நகராட்சி பகுதிகளில் அரசாணை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

1)அரசாணை எண் G.O(4D) No.2 Dated.05.06.2018

2)தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு Part IV Section–2 நாள்.16.07.2018

3)அரசாணை எண்.15, 16, மற்றும் 17 நாள்.31.01.2019

4)அரசிதழ் வெளியீடு Part III section1(a) நாள்.31.01.2019

அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவு செய்வதற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.2854/2019/எப்1

**தீர்மானம் எண்.1001**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 18**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் விநியோகம் 2019–20 நகர் பகுதியில் தினசரி விநியோகம் செய்யப்படும் குடிநீருக்கு தற்போது Liquid Chlorination கலக்கப்பட்டு வருகிறது. தற்போது இருப்பு குறைவாக உள்ள காரணத்தினாலும், மழைகாலம் ஆரம்பித்து விட்டபடியால் அவசர அவசியம் முன்னிட்டு Liquid Chlorination வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2792 /2019/இ1 .

**தீர்மானம் எண்.1002**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 19**

இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தனியார் மயம் மூலம் நகராட்சியால் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் திடக்கழிவு சேகரிப்பு பணி மேற்கொள்வதற்கு கூடுதலாக 50 நபர்களை நியமித்து பணிசெய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினத்தந்தி நாளிதழில் வெளியிட்ட வகையில் உத்தேச மதிப்பீடு ரூ.12,500/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**– அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1003**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 20**

இராமநாதபுரம் நகராட்சி, அவசர அவசியம் கருதி சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, நகராட்சி சட்ட விதி 15ன் கீழ் 01.08.2019 முதல் 30.08.2019 வரையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்ட வகையில் கீழ்க்கண்டவாறாக செலவினம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி–நொச்சியவல் ஊரணி OHT மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் OHT அமைந்துள்ள 5.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியில் 5’’ Slive வால்வு பழுதாகியுள்ளதற்கு பழுது நீக்கம் அகற்றி இயக்கி கொத்தமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே | 8,000/– |

| | | |
|---|---|---|
| 2) | இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் சிதம்பரம் பிள்ளை ஊரணி Pumping Station Zone-ல் உள்ள 15HP மின்மோட்டாரில் Impeller பழுதாகியுள்ளதால் அதனை பழுதுநீக்கம் அகற்றி இயக்கி கொடுத்தமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 7,900/– |
| 3) | இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம், Central Clock அருகில் ஏற்பட்ட பம்பிங் மெயின் உடைப்பினை சரி செய்யும் பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 2,74,938/– |
| 4) | இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் விநியோகம், வார்டு எண்–23, அண்ணா நகர் கடைசி சாலை (Church Road-யிலிருந்து NGO காலணி தெருவிற்கு புதிய பகிர்மான குழாய் பதிக்கும் பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 74,834/– |

**<u>அலுவலக குறிப்பு–</u>** தமிழ்நாடு மாநில நகராட்சி சட்டம் 1920 விதியின் கீழ் மேற்கண்டவாறு மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பதிவேடு பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.877/2016/இ1

**<u>தீர்மானம் எண்.1004</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்
இராமநாதபுரம் நகராட்சி